அசல் வழக்கு எண். 96/2022

நாள் : 24.04.2025

வா.சா. : 1

பெயர் : பிரதாப்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வழக்குரையில் whole sale மீன் வியாபாரம் செய்வதாகவும் ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் செய்வதாகவும் சொல்லியுள்ளேன் என்றாலும் அதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மீன் வியாபாரம் செய்வதற்கும், ரியல் எஸ்டேட் செய்வதற்கும் லைசென்ஸ் கிடையாது. 1ம் பிரதிவாதி சாந்தி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரி. 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் மாணிக்கவேல். மாணிக்கவேலை 2004 ம் வருடம் முதல் தெரியும். மாணிக்கவேலை யார் மூலமாக தெரியும் என்றால் மாணிக்கவேல் இடம் வாங்கிகொடுப்பார் அதனால் அவரை தெரியும். அவர் மயிலாடுதுறை பட்டமங்கல புது தெருவை சேர்ந்தவர். அவரின் நிரந்தரமான முகவரி மயிலாடுதுறை பட்டமங்கல புது தெருவா என்றால் ஆமாம். 2004 முதல் அவர் அங்கு தான் குடியிருக்கிறாரா என்றால் அது தெரியாது. அவர் எனக்கு 2004 முதல் பழக்கம். நான் சொல்வது பொய் என்றாலும், அவர் சொந்த ஊர் கீழமருதாந்தநல்லூர் பஞ்சாயத்து மேலமருதாந்தநல்லூர் கிராமம் என்றாலும் அவர் 15 வருடங்கள் தொடர்ச்சியாக பஞ்சாயத்து தலைவராக அங்கு இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் என்னிடம் மயிலாடுதுறை பட்டமங்கல புது தெருவில் இருப்பதாகத்தான் சொன்னார். அவர் எப்படி இருப்பார் என்று சொல்லமுடியுமா என்றால் நார்மல் ஹைட்டில் கொஞ்சம் குண்டாக மாநிறமாக இருப்பார். அவரின் செல்நம்பர் தெரியுமா என்றால் நினைவில்லை என்று சொல்லிவிட்டு சாட்சி செல்நம்பரையும் சொல்கிறார். 9047117586. ஆறு நம்பர் அடித்தவுடன்

R. Pratha.

பெயர்வந்துவிடும் அதை அடித்து கால் செய்வேன். அந்த நம்பர்க்குதான் நான் போன் செய்வேன் என்றால் ஆமாம். என்னுடைய போன் நம்பர் 8883636363. இது வரை எத்தனை முறை அவருடன் செல்போனில் பேசியிருப்பேன் என்றால் பலமுறை பேசியிருப்பேன். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. 2018 முதல் வருமானம் 2,50,000/- வந்தாலே வருமான வரி கட்டவேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியாது. நான் கொடுத்ததாக சொல்லும் 15 லட்சம் ரூபாய் பணத்தை வீட்டில் வைத்திருந்தேனா அல்லது பேங்கில் இருந்து எடுத்து வந்தேனா என்றால் வீட்டில் வைத்திருந்தேன். 15 லட்சம் ரூபாய் எத்தனை ரூபாய் நோட்டுகள் என்றால் அனைத்தும் ஐநூறு ரூபாய் நோட்டுகள். அந்த ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் புதிய நோட்டுகளா பழைய நோட்டுகளா என்றால் பழைய நோட்டுக்கள். 08.11.2016 ம் வருடம் பழைய ரூபாய் நோட்டுக்களை வங்கியில் ஒப்படைத்து புதிய நோட்டுக்கள் பெற்றுக்கொள்ளும்படி இந்திய அரசாங்கம் அறிவித்தது தெரியுமா என்றால் தெரியும் நான் பழைய நோட்டுக்கள் என்று சொன்னது வியாபாரம் செய்து அழுக்காக இருக்கும் நோட்டைதான் பழைய நோட்டு என்று சொன்னேன். நான் பழைய நோட்டுகளை பேங்கில் கொடுத்து மாற்றினேனா என்றால் மாற்றினேன். எவ்வளவு ரூபாய் என்றால் சுமார் 3, 4 லட்சம் ரூபாய். 2016 கால கட்டத்தில் ஒரு தனிநபர் வங்கியிலிருந்து அதிகபடியான தொகை எடுக்க முடியாது சூழல் இருந்தது என்றால் சரி. வாசாஆ 1 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியிடம் சாட்சி கையெழுத்து பெற்றேனா என்றால் இல்லை. சாந்தி பணம் வாங்கும்போது வரவில்லை. 1ம் பிரதிவாதி சாந்தி இதுவரை என் வீட்டிற்கு வந்ததில்லை என்றால் சரி. என்னுடைய வழக்குரையில் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் பணம் வாங்க வந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு

R. [signature]

என்றால் சரி. வாசாஆ 1 ஆவணத்தில் சாட்சி கையெழுத்துபோட்டவர்கள் யார் என்றால் என் வீட்டில் இருந்து இரண்டு கிமீ தூரத்தில் குடியிருப்பவர்கள் வியாபாரத்திற்கு வருபவர்கள். அவர்கள் பெயர் ராஜேந்திரபிரசாத், மணிமாறன் ஆகியோர். வாசாஆ 1 ஆவணத்தில் பின்பக்கத்தில் உள்ள எண்டார்ஸ்மெண்டில் சாட்சி கையெழுத்துபோட்டது யார் என்றால் ராஜேந்திரபிரசாத் மட்டும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். புரோநோட்டை டைப் செய்து எடுத்து வந்தது மாணிக்கவேல். புரோநோட் எழுதி பணம் கொடுக்கும்போது மாணிக்கவேலின் அசல் கிரயபத்திர மூலப்பத்திரம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. பணம் வாங்கி மூன்று மாதம் கழித்து மாணிக்கவேல் பெயரில் உள்ள அசல் கிரய பத்திரம் இரண்டு அசல் மூலப்பத்திரம் கொடுத்தார். 15 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கும்போது பத்திரங்கள் வாங்கிகொள்ளாமல் ஏன் கடன் கொடுத்தேன் என்றால் மாணிக்கவேல் ஏற்கனவே இரண்டு, மூன்று முறை என்னிடம் கடன் வாங்கி சரியாக திருப்பி கொடுத்திருக்கிறார். அதனால் பத்திரங்கள் அப்போது வாங்கவில்லை. ஏற்கனவே மாணிக்கவேல் என்னிடம் கடன் வாங்கியதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. மாணிக்கவேல் என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும், அதற்கு எந்த புரோநோட்டும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் வாசாஆ 1 ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் மாணிக்கவேலின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. அந்த கையெழுத்து அவருடையதா இல்லையா என்று கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி பரிசோதனை செய்தால் தெரிந்து விடும் என்றால் சரி. அதற்கு எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லையே என்றால் இல்லை. வாசாஆ 5 ஆவணமான மாணிக்கவேலின் இறப்பு

R. [signature]

சான்று எனக்கு யார் கொடுத்தார்கள் என்றால் மயிலாடுதுறை நகராட்சியில் நகல் கேட்டு வாங்கினேன். நான் தனிப்பட்ட முறையில் நகராட்சியில் மனுக்கொடுத்து வாங்கினேனா என்றால் ஆமாம். நகல் வாங்குவதற்கு இறந்த தேதி சொல்லவேண்டும் என்றாலும் அந்த இறந்த தேதி யார் சொன்னது என்றால் எனக்கே தெரியும். மாணிக்கவேல் தன்னுடைய சொந்த ஊரான மேலமருதாந்தநல்லூரில் இறந்தார் என்றாலும் அதனால் மயிலாடுதுறை நகராட்சியில் அவருடைய இறப்பு பதிவு செய்ய முடியாது என்றால் சரியல்ல. நகராட்சியில் சுந்தரவடிவேல் என்ற புரோக்கர் இருக்கிறார் அவரிடம் மாணிக்க வேல் இறந்த சான்று வேண்டும் என்று கேட்டேன் அவர் வாங்கிகொடுத்தார். மாணிக்கவேலுவிற்கு இரண்டு மனைவிகள் உள்ளது தெரியுமா என்றால் தெரியும். எப்போது தெரியும் என்றால் அவருடன் பழகி மூன்று நான்கு வருடத்தில் சொன்னார். குறிப்பாக எந்த வருடம் சொன்னார் என்றால் 2010 ல் சொன்னார். 1ம் பிரதிவாதி சாந்தி முதல் மனைவியா என்றால் ஆமாம். 2ம் மனைவி யார் என்றால் அவர் பெயர் தெரியாது. முதல் மனைவி சாந்திக்கு இரண்டு பெண்குழந்தைகளும் இரண்டாவது மனைவிக்கு ஒரு ஆண் ஒரு பெண் குழந்தை இருப்பது தெரியுமா என்றால் தெரியும் ஆனால் யாருக்கு இரண்டு பெண் குழந்தை யாருக்கு ஒரு ஆண் ஒரு பெண் குழந்தை என்று தெரியாது. சாந்தியும் மாணிக்கவேலின் இரண்டாவது மனைவியும் அக்கா தங்கைகள். ஆண் குழந்தை மனநிலை சரியில்லா குழந்தை என்றால் சரி. 1ம் பிரதிவாதி மற்றும் மாணிக்கவேலின் நான்கு குழந்தைகளுக்கும் சேர்த்து தான் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சரி. அறிவிப்பு அனுப்பிய மாணிக்கவேலின் குழந்தைகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. அதனால் இந்த வழக்கு

R.Pathy.

தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்து இல்லாமல் மாணிக்கவேல் பெயரில் வேறு பல சொத்துக்கள் உள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்தை ஒட்டி பக்கத்து மனை மாணிக்கவேல் பெயரில்தான் உள்ளது என்றால் தெரியாது. எனக்கு அது தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை நான்கெல்லை விவரத்தில் ரவிச்சந்திரனிடம் கிரயம் பெற்ற லேட் மாணிக்கவேல் மனைக்கு வடக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இந்த சொத்தை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரி.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு
னை என்னால் தட்டச்சருக்கு எடுத்து
ல்லப்பட்டு. அவர் என் முன்பு என்
ணையின் பேரில் தட்டச்சு செய்து
மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக்
பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று
கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

24/4/25